பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்கண்ட சம்பவங்களில் உயிரிழந்தவர்களின்குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(உ) கன்னியாகுமரி, களியக்காவிளை சோதனைச் சாவடியில் பணியிலிருந்தபோது சுடப்பட்டு உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சன் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி, களியக்காவிளை சோதனைச் சாவடியில் பணியிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சன், அடையாளம் தெரியாத நபர்களால் சுடப்பட்டு உயிரிழந்த விவரம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு-கேரள மாநிலஎல்லையான கன்னியாகுமரி மாவட்டம்,களியக்காவிளையில் சோதனைச் சாவடி அமைத்து காவல் துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

இச்சோதனைச் சாவடியில் நேற்று (8-1-2020) இரவு 8-00 மணி முதல் களியக்காவிளை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர், திரு. வில்சன் என்பவர் பணியில் இருந்தார். அப்போது இரவு சுமார் 9-30 மணியளவில் அங்கு வந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சனை கைத்துப்பாக்கியால் சுட்டும், கத்தியால் குத்திவிட்டும் தப்பிச் சென்றுள்ளனர். சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சன் காயங்கள் ஏற்பட்டு, நிலை தடுமாறி கீழே விழுந்துள்ளார்.

இது குறித்து தகவலறிந்த காவல் துறையினர் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று, காயமடைந்த திரு. வில்சனை மீட்டு, குழித்துறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர், திரு. வில்சன் உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி அறிந்த தெற்கு மண்டல காவல் துறைத் தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட காவல்

துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், எனது உத்தரவின்பேரில் காவல் துறைத் தலைமை இயக்குநர் அவர்களும் சம்பவ இடத்திற்கு உடனடியாகச் சென்று விசாரணையை மேற்கொண்டு வருகிறார்.

சம்பவ இடத்தில் இரண்டு தோட்டாக்கள் மற்றும் இரண்டு காலி தோட்டாக்கள் ஆகியவற்றைக் காவல் துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பாக களியக்காவிளை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து, காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வழக்கில் எதிரிகளை அடையாளம் கண்டு கைது செய்ய, நான்கு தனிப் படைகள் அமைக்கப்பட்டு, தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தனிப்படையினர், அப்பகுதியிலுள்ள கடைகள் மற்றும் வீடுகளில் அமைக்கப்பட்டுள்ள CCTV பதிவுகளை ஆய்வு செய்து வருகின்றனர். வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது. குற்றவாளிகளை விரைவில் கண்டுபிடித்து, அவர்களுக்குக் கடுமையான தண்டனை பெற்றுத்தர அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும்.

மறைந்த திரு. வில்சனுக்கு மனைவி மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர். அன்னாரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த காவல் உதவி ஆய்வாளர் திரு. வில்சன் அவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்கப்படும். மேலும், அன்னாரது குடும்பத்தில் ஒருவருக்கு தகுதிக்கு ஏற்றாற்போல், கருணை அடிப்படையிலான அரசுப் பணி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஊ) துறைமுகம் தொகுதி, சென்னை நதிகள் பாதுகாப்புத் திட்டம், கூவம் நதிக் கரையோரம் வசிக்கும் மக்களை மறுகுடியமர்வு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.